224315

கிராம பஞ்சாயத்து

JL
V211,64M
N27·3·4
224315

# கிராம பஞ்சாயத்து.

# VILLAGE PANCHAYAT.

திருச்சிராப்பள்ளியில் வெளிவரும்

## மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

கிராமப் புனருத்தாரண, நிர்மாண, முன்னேற்ற வேலைகளைத்தாங்கி
வெளிவரும் பத்திரிகை.

பத்திராதிபர் : **M. S. R.** சந்திரன்.

பு. 3] 1927-௵ ஆகஸ்டு ௴ — பிரபவ௵ ஆடி-ஆவணி ௴ [ஸ. 4

2 8 OCT 1927

## CONTENTS.

### விஷய அட்டவணை.


1. கிராம உபாத்தியாயர்கள்மூலம் வைத்திய உதவி ... 89
2. "உபசாரகர்" களைப் பற்றி ஒரு பத்திரிகையின் அபிப்பிராயம் ... ... ... 92
3. கிராம வைத்திய உதவி ... ... 94
4. திருப்பளாத்துறை கூட்டுறவு சங்கம் ... 96
5. தஞ்சை பஞ்சாயத்து கான்பரன்ஸ் ... 97
6. பஞ்சாயத்தும் வெளி உதவியும் ... ... 101
7. கிராம பஞ்சாயத்துக்களின் நிர்வாக அறிக்கை 102
8. நிலச்சுவான்தார்களின் சங்கங்களின் அவசியம் 109
9. பரோடா சமஸ்தானமும் பஞ்சாயத்து பாடசாலைகளும் ... ... ... 112


மானேஜர், "கிராம பஞ்சாயத்து" ஆபீஸ்,
தெப்பக்குளம் போஸ்டு, (திருச்சிராப்பள்ளி.)

## வீடுகட்டும்போது வேண்டுவன யாவை?

தட்டோடுகள், கூரையோடுகள், தளவரிசை கற்கள் (சாதா) பூ சித்திரவேலைப்பாடுகள் அமைந்துள்ள தளவரிசை சாமான்களில் பல தினுசுகள், கடப்பைக் கற்கள், இதர கட்டடசாமான்கள் முதலியன, கள்ளிக்கோட்டையில் தலைமை ஆபீஸ் காமன் வெல்த் ட்ரஸ்ட் கம்பெனியாரால் தயாரிக்கப்பட்டு, கீழ்க்கண்ட விலாசத்தாரிடம் கிடைக்கும்.

Roofing Tiles, Ceiling Tiles, Floor Tiles, Ridge Tiles, Hourdis, Salt-glazed stoneware Pipes, Fire Bricks and Fire Clay, and all Terracotta Articles; Rangoon Teak in Logs and Scantling, Cuddapah Slabs, Paint, Cement, etc.

ஏ. எஸ். கோபால கிருஷ்ணய்யர்,
ஏஜண்ட் "காமன் வெல்த் ட்ரஸ்ட் லிமிடெட்"
மேலப்புலிவார்டு ரோட், திருச்சிறுப்பள்ளி.



## கல்நார் தந்தசூர்ணம்.

கல்நார் தந்தசூர்ணம். இந்த சூர்ணம் வைத்தியமுறைப்படி அநேகவித பட்டைகளாலும், வேர் வகைகளாலும், கல்நாரினாலும் செய்யப்பட்டுள்ளது. இதை உபயோகித்தால் பலவித தந்த ரோகங்களை நீக்கும். இதனை ஒருமுறை தருவித்துப்பார்த்தால்தான் இதன் பெருமையும், குணமும் தெரியும்.

டப்பி 1-க்கு விலை அணா **2.** டஜன் 1-க்கு விலை ரூ. **1—4.**

**R. S.** மணி அண்டு கோ.,
அம்மங்குடி, திருச்சந்துறை P.O., (திருச்சி ஜில்லா).



## லதீபி மனோஹரா.

இந்த ஹல்வா ருசியுள்ளது. மலச்சிக்கலுக்கும், வாயுவுக்கும் கைகண்ட சஞ்சீவி. இதைச்சாப்பிடுவதில் எவ்வித பத்தியமும் இல்லை. இரவு போஜனத்திற்குப்பிறகு இதைச் சாப்பிட்டால் இதன் குணம் நன்குதெரியும். வாயு உபத்திரவத்திற்கு விரைவில் உதவிபுரியும். உண்மைத்தோழன் லதீபி மனோஹராவைத்தவிர வேறு யார்?

விலாசம்:—**A. Z.** முகமத் லதீபுதீன் சாஹப்,
யூனானி டாக்டர்,
சம்சபீரான் தெரு, திருச்சிறுப்பள்ளி.

# கிராம பஞ்சாயத்து.

# VILLAGE PANCHAYAT.

9573-ம், தார் ...ரியம் செய் ... ஜில்லா ...ரின்

கிராமவாசிகளின் முன்னேற்றத்தையும் சுகத்தையும் முக்கியமாக நாடி கிராமங்கள்தோறும் பஞ்சாயத்து முறைகளையும் கொள்கைகளையும் கிராம பஞ்சாயத்து சபைகளின் மூலமே பிரசித்தப்படுத்தி மென்மேலும் கிராம பஞ்சாயத்து சபைகள் ஆங்காங்கு ஏற்படுவதற்கென

முக்கிய சாதனக்கருவிபோன்று பிரதி மாதந்தோறும் திருச்சி நகரினின்றும் வெளிவரும் தமிழ்மாதப்பத்திரிகை.

இதன் வருஷசந்தா ரூபாய் மூன்றே.


| புத்தகம் 3. | பிரபவ-ஹு [illegible]—1927 ஆகஸ்டு-மீ | நம்பர் 4. |
|---|---|---|


## கிராம உபாத்தியாயர்கள்மூலம் வைத்திய உதவி.

## VILLAGE AID SCHEME.

பெரும்பாலும் கிராம உபாத்தியாயர்கள் கிராம முன்னேற்றத்திற்குரிய காரியங்களில் ஸம்பந்தப்படாமலிருக்க முடியாது என்பது யாவருக்கும் தெரிந்தவிஷயம். எனவே அவர்கள் தற்போது குறைந்த சம்பளம் பெற்று ஜீவிப்பதிலிருந்து அவர்களைக் கைதூக்கிவிட முயற்சிப்பது உத்தம காரியமாகும். அப்படிச் செய்யப்புகின் அவர்களது வாழ்வு நிலைமையும் சிறிது மேலோங்கும், [illegible] விசாலிக்கும், கிராம சமூக முன்னேற்றத்திற்[illegible]க்கோலுவோர் என்னும் முறையில் மிகுதியும் பொறுப்புவாய்ந்த ஊக்க[illegible]னும், உற்சாகத்துடனும் தம் தொழிலை நன்கு நடத்துவர்.

224315

...லவூர்களில் ... உபாத்தியாயர்கள் ஐக்கிய சங்கங்களில் ...ர்களாகவும், கிராம போஸ்டு மாஸ்டர்களாகவும், கிராம சமூக ...பனங்களில் முக்கியஸ்தர்களாகவும் இன்னும் பல சில்லரைப் ...தவிகளையும் பெற்று வாழ்ந்து வருகின்றனர். பலவிடங்களில் கிராம உபாத்தியாயர்கள் பெரிதும் கௌரவிக்கப்படுகிறார்கள். கிராம கோர்ட்டுகளிலோ அல்லது நிர்வாக ஸ்தாபனங்களிலோ அவர்கள் சிலவூர்களில் கலந்துகொள்ளாமலிருக்க முடியவில்லை. கிராம நிர்மாண காரியத்திலும், முன்னேற்ற வேலைகளிலும் அவர்களையும் கூடியவரைச் சேர்த்துவைப்பதால் நன்மையேயன்றி கெடுதியொன்றும் உண்டாகாது. அவர்களது சிக்கனவாழ்வு சீர்பட்டு வாவிருத்தலாலும், தொழிலில் தேர்ச்சிபெற்று வருவதாலும், தற்போது பிரதி வருஷமும் பலர் தொழிலை நாடுவதாலும் அவர்கள்மூலமே கிராம பிரதம வைத்திய முறைகளையும், சில்லரை சிகிச்சைமுறையையும் கிராமங்களில் பரவச்செய்வது சர்வ உத்தமமான காரியமாகும்.

உலகமுழுதும் அனுஷ்டித்திராத ஒருவித வைத்தியமுறையை பம்பாய் மாகாணம் அனுஷ்டித்து நற்பலன் காட்டியுள்ளது. சென்ற மூன்று வருஷகாலத்தில் பல கிராமத்தார்களுக்கு சுகத்தைக்கொடுத்திருக்கிறது. பூனா, பிஜபூர் ஆஸ்பத்திரிகளில் பிரைமரி ஸ்கூல்மாஸ்டர்களுக்கு பூர்வாங்கமான வைத்திய, ரண சிகித்சை முதலியவற்றின் அவசியமான பாகங்களும், முறைகளும் கற்றுக்கொடுக்கப்பட்டன. தேர்ச்சிபெற்ற 30 உபாத்தியாயர்கள் பூனா, பிஜபூர், ஷோலாபூர், தார்வார் ஜில்லாக்களில் சுமார் 1000 முதல் 1500 வரை ஜனத்தொகையுள்ள கிராமங்களில் தங்கள் உபாத்திமைத் தொழிலுடன் சில்லரை வைத்திய ரண சிகித்சை உதவிகளைச் செய்து வந்திருக்கிறார்கள். அவர்களை "உபசாரகர்கள்" என்று பெயரிட்டு அழைத்தனர். தங்களால் வைத்தியம் செய்யக்கூடாத அல்லது முடியாத இனங்களை பக்கத்து ஆஸ்பத்திரி அல்லது வைத்தியசாலைக்கு அவர்கள் அனுப்பிவந்திருக்கின்றனர்.

பம்பாய் சர்க்கார் ... அறிக்கையொன்றை வெளியிட்டிருக்கிறார். 'உபசாரகர்க...' ... சால உபாத்தியாயர்கள் ... 10 மாதங்களுக்குள் ...

சென்னை-600 003
224315

கேஸுகளையும், பிஜபூரில் 54799-ம், ஷோலாபூரில் 19573-ம், தார்வார் ஜில்லாவில் 23897 கேஸுகளையும் கவனித்து வைத்தியம் செய்திருப்பது குறிப்பிடத்தக்கது. மேலும் அம்மாகாணத்து ஜில்லா கலெக்டர்களும், ஸிவில் சர்ஜன்களும், ஸ்தல ஸ்தாபனங்களின் தலைவர்களும் உபசாரகர்களென்று சொல்லப்படுகிற எலிமெண்டரி பாடசாலை உபாத்தியாயர்களின் கிராமாந்தர வைத்திய உதவியை மெச்சிப்புகழ்ந்து கூறியிருக்கின்றனர். சிறிய புண்கள், அல்லது ரணங்கள், காது, தோல், வயிற்றுப்போக்கு, வயிற்று சிறுவலிகள் மலச்சிக்கல் போன்ற சில்லரை வியாதிகளுக்கும் தற்கால உபசாந்தியாக இதர வியாதிகளுக்கும் வைத்தியம செய்து உதவுவதுடன் தொத்து வியாதிகள் பரவுங்கால்த்து கிணறுகளையும் குடிதண்ணீர்க் குளங்களையும் சுத்தமாக்கியும், சுகாதார முறைகளைப் பரவச்செய்ய பிரசாரம் செய்தும், பிள்ளைகளின் பெற்றோர்களிடத்து நேரிடப் பேசி வீடுகளையும், உடைகள் முதலியனவற்றையும் சுத்தமாக வைத்துக்கொள்ளும்படியும் உபாத்தியாயர்கள் தெளிவாக எடுத்துச் சொல்லக்கூடும். மேற்சொன்னமாதிரியில் அம்மாகாணத்தில் இந்த உபசாரகர்கள் செய்திருக்கின்றனர். கிராமத்தார்களும் இந்த உதவியைப் பெரிதும் உபயோகித்துக்கொண்டு திருப்தியடைந்து வாழ்த்தி வருகின்றனராம்.

தேர்ச்சிபெற்ற டாக்டர்களை குறைந்த சம்பளத்தில் நியமித்து அவர்களின் சார்பாக ஒரு வைத்தியசாலையை அதிகப்பணச்செலவில் புது நவீனமுறையில் ஏற்படுத்துவதென்பது கவர்ன்மெண்டாரால் சாத்யமானதென்றாலும் எல்லா கிராமங்களிலும் இத்தகைய டாக்டர்களை நியமிப்பதும், வைத்தியசாலைகளை ஏற்படுத்துவதும் கடினம். முக்கியமானவிடங்களில் மட்டும் ஏற்படுத்திவிட்டு ஏனைய பெரிய கிராமங்களில் பம்பாய் மாகாணத்திய "உபசாரகர்கள்", என்றழைக்கப்படும் கிராம வைத்திய உதவி முறையை இந்த சென்னை மாகாணத்திலும ஏற்படுத்த கவர்ன்மெண்டார் முன் வர வேண்டும். தேர்ச்சிபெற்ற உயர்தர எலிமெண்டரி பாடசாலை உபாத்தியாயர்களைக்கொண்டு இந்த முறையை எங்கும் பரவச்செய்வது உத்தமம். மிஷன் பாடசாலைகளின்மூலமும், சர்க்கார் உதவி

பெரும் பாடசாலைகளின் மூலமும் கிராம வைத்திய உதவியை சிக்கன முறையில் பரவச் செய்வதால் பல நன்மைகளேற்படும்

மேலும், மேற்சொன்ன உயர்தர எலிமெண்டரி பாடசாலை உபாத்தியாயர்களுக்கு வாலிபச் சாரணியக்க விதிகளையும் (Principles of the Boy Scout movement) சுகாதாரப் பிரதம படிப்பையும் (Elementary Knowledge in Sanitation) கற்றுக் கொடுத்துவிடின் மேற்சொன்ன வைத்திய உதவிக்குப் பெரிதும் இவைகள் உற்றதுணைக் கருவிகளாகும். இந்த விஷயங்களை கவர்ன்மெண்டாரும், ஸ்தல ஸ்தாபனங்களும் ஊன்றி கவனித்தல் வேண்டும்.

---

## உபசாரகர்களைப்பற்றி ஒரு பத்திரிகையின் அபிப்பிராயம்.

இந்தியன் டெயிலி மெயில் பத்திரிகை பின்வருமாறு தலையங்கம் எழுதுகிறது:—“இந்தியா ஒரு பெரிய தேசம். கிராமங்கள் யாவும் பெரும்பாலும் ஒன்றுக்கொன்று அதிக தூரத்திலிருக்கின்றன. மேல்நாட்டு வைத்தியமுறையை அதிகப் பணச்செலவில்லாமல் கிராமத்தார்களுக்கு உதவ முயற்சிப்பது சுலபமானதல்ல. பம்பாய் மாகாணத்தில் ஏதோ சில ஜில்லாக்களில் இந்த உபசாரகர்களின் மூலம் கிராம வைத்திய முறையை அனுஷ்டித்துப் பார்த்துவிட்டதாகவும், நல்ல பலன் தந்துள்ளதென்று சொல்வதும் பொருத்தமானதல்ல. மேலும் அது தப்பான முடிவுமாகும். உபாத்தியாயர்களின்மூலம் பெரிய வியாதிகளைப்போக்க முயற்சிப்பது தவறான காரியம். சாதாரணமான வைத்தியசாலைகளிலும், ஆஸ்பத்திரிகளிலும் கம்பவுண்டர்களாயிருந்தவர்கள், பென்ஷன் பெற்றதும் அரை வைத்தியர்களென்று தங்களை நினைத்துக்கொண்டு வைத்தியம்செய்ய முற்படுவதால் ஏற்படும் தீங்குகள் பலவாகும். அவர்களால் ஏற்படும் கெடுதிகளை நீக்கத் தேர்ச்சிபெற்ற டாக்டர்களை அழைக்கவேண்டியிருக்கிறது. அன்றியும், இந்த உபசாரகர்களென்றழைக்கப்படுகிற உபாத்தியாயர்கள் சிறிதுகாலத்துக்குள் இதன்மூலம் பணம் வருகிறதாகத் தெரிந்துகொண்டால் தாங்களே தக்க தேர்ச்சி பெற்றுவிட்டதாகவும், பெரிய வைத்தியர்களென்றும் தங்களை நினைத்துக்கொண்டு தங்கள் உபாத்திமைத்தொழிலையும் விட்டுவிடலாம். இந்த நிலையில் எலிமெண்டரி படிப்பு விருத்தியாகாமல் தடைபடும். தொழிலை விட்டுவிட்டு வைத்தியத்தில்மட்டும் இறங்கிவிட்டால் கிராம ஜனங்களுக்குக் கெடுதி அதிகம் சம்பவிக்கும்.

மேனாட்டு வைத்தியமுறைகளில் கிராமாந்தரங்களில் வைத்திய உதவி ஏற்படுவது தற்போதிய நிலையில் முடியாது. ஆனால் கிராம நாட்டு வைத்தியர்களுக்கும் இதரநாட்டு முறைகளைக்கொண்டு [illegible]த்தை செய்பவர்களுக்கும் தேர்ச்சிகொடுத்து அவர்கள்மூலமே விருத்திசெய்யலாம். இதனால் கவர்ன்மெண்டுக்கு பணச்செலவும் குறையும். என்றாலும் இந்த நிலையில் கிராமாந்தர வைத்தியக் குறைவு நிவர்த்தியாகிவிடுமென்று சொல்லமுடியாது. கீழ் ஆப்பிரிகா பிரதேசத்தில் ரஸ்தாக்கள் போடவும், போக்குவரவு சாதனங்கள் அமைத்துக்கொடுக்கவும் பிரிடிஷ் கவர்ன்மெண்டார் ஒருகோடி பவுன் கடன்கொடுத்து உதவ, அத்தொகையைக்கொண்டு அப்பிரதேசத்தில் போக்குவரவு சாதனங்கள் சீர்ப்பட்டுவருகின்றன. இந்திய கிராமங்களுக்கு இன்றியமையாதனவாகிய படிப்பு, வைத்தியம் இவ்விரண்டு முக்கிய விஷயங்களுக்கு தேவையானவளவு திரவியம் வேண்டுமானால் இந்தியா கவர்ன்மெண்டுக்கும் கஷ்டமான காரியமல்ல.”

---

‘கிராமபஞ்சாயத்’ தின் வருட சந்தா ரூ. 3. பத்திரிகை வேண்டுவோர்,
“கிராம பஞ்சாயத்து” ஆபீஸ்,
தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி என்று எழுதவும்.

## கிராம வைத்திய உதவி.

## VILLAGE MEDICAL AID.

முன்னம் சென்னைச் சட்டசபையின் கூட்டத்தில் ஸ்ரீமான் ராமச்சந்தர செட்டியின் கேள்விக்கு விடையளிக்கையில் கனம் சுகாதார மந்திரி கிராம வைத்திய உதவிக்கான திட்டத்திலுள்ள குறைகள் ஏதுவும் தமது கவனத்திற்கு கொண்டுவரப் படவில்லை என்று கூறினார். கிராமவாசிகளின் க்ஷேமத்தில் கருத்துள்ளவனாக இருப்பதால் இம்முறையிலுள்ள குறைகளை அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவரவும் அபிவிருத்திக்கான சில யோசனைகளைக் கூறவும் விரும்புகின்றேன். வைத்தியர்கள் கிராமங்களில் நிரந்தரமாகக் குடியேறுவதற்கு மிகுந்த கஷ்டங்களேற்படுகின்றன வைத்தியர்களின் அதிருப்தியின் காரணமாகவோ அன்றி தாலூகா போர்டுகள் ஆஸ்பத்திரிகளிருக்கு மிடங்களை மாற்றுவதனாலேயோ பல வைத்தியர்கள் நல்ல வேலை கிடைக்கும் வரையில் தான் கிராமங்களில் இருக்கின்றார்கள். நல்லவேலை கிடைத்து விட்டால் அவர்கள் போய்விடுகிறார்கள். 5 மைலுக்குள் எந்த ஆஸ்பத்திரியையும் ஏற்படுத்த அனுமதிக்காமலும் அதிகமான சகாயப் பணங்கொடுத்து உதவியும் வைத்தியர்களை குடியேறச் செய்ய வேண்டும். இம்முறை சமீபத்தில்தான் அமுலுக்கு வந்ததால் கிராமாந்திரங்களில் போலிவைத்தியம் செய்து வருவோர்கள் இதற்குத்தடையாக இருக்கின்றார்கள். கிராமங்களிலுள்ள எல்லா உத்தியோகஸ்தர்களும் இம்முறையைப் பிரபல்யப்படுத்துவதற்காக உதவி செய்யவேண்டுமென்று கவர்ன்மெண்டார் உத்தரவு பிறப்பிக்க வேண்டும். இந்த வைத்தியர்கள் கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்களல்ல. இவர்கள் ஸ்தலஸ்தாபனங்களின் உத்தியோகஸ்தர்களுமல்ல. இவர்களை நடத்தும விஷயத்திலும் இவர்களுக்குக் கடிதம் எழுதும் விஷயத்திலும் இவ்வுண்மையை மறந்து அதிகாரிகள் நடக்கின்றார்கள். இதை நீக்கவேண்டும். லோகல்போர்டுத் தலைவர்கள் தங்களுக்குத் தேர்தலில் உதவி செய்யும்படி இந்த உத்தியோகஸ்தர்



களை உபயோகிக்கின்றார்கள். இதையும் பரிகரிக்கலாம். தாலூகா போர்டுகளின் ஆதிக்கத்திலிருந்து இந்த வைத்தியர்களை நீக்கி விட்டால் இத்தொழிலே எல்லோருடைய மனதையும் கவரக்கூடியதாக இருக்கும். ஜில்லாக் கல்விச்சபையைப்போன்று இதையும் ஜில்லாவின் பல பாகங்களிலுமிருந்து வரும் வைத்திய பிரதிநிதிகளைக்கொண்டு ஏற்படுத்தப்படும் ஜில்லா வைத்திய சபையின் ஆதிக்கத்திற்குட்படுத்தினால் இம்முறை மிக்க பலனுள்ளதாக இருக்கும். கல்வி கிராண்ட் கொடுப்பதுபோல இம்முறையிலும் பண சகாயம் செய்யலாம். கவர்ன்மெண்டார் வைத்தியர்களுக்குப் பண சகாயஞ் செய்வதற்குப் பதிலாக மருந்துகளாகக் கொடுத்து உதவலாம். கிராம வைத்திய சாலைகள் நிரந்தரமாகவும் நன்றாகவும் வேலை செய்யும்படி செய்வதற்காகத் தற்பொழுதுபோல் பணங்கொடுத்து உதவாமல் கருவிகளுக்காகவும் சிப்பந்திகளுக்காகவும் கட்டடத்திற்காகவும் கிராண்ட் கொடுக்கவேண்டும். உற்சவகாலங்களில் மருத்துதல்போன்ற வெளி வேலைகளைக் கொடுக்கக்கூடாது. அவ்வேலைகளைக் கொடுத்தால் அதற்குப் போதிய கூலி கொடுக்க வேண்டும். கவர்ன்மெண்ட் விடுமுறையுடன் 15 நாட்கள் ரஜாவும் கொடுக்கப்படுகிறது. இதனுடன் 1-மாதம் பிரிவிலேஜ் ரஜா அளிக்க வேண்டும். இம்மாதிரியான அனுகூலங்கள் செய்துகொடுத்தால் தான். வைத்தியர்கள் கிராமங்களில் திருப்திகரமான நிலைமையில் இருக்கமுடியும். கிராம புனருத்தாரண முறை இலக்ஷியத்தை அடைவதற்கும் இது சாதனமாக இருக்கும்.

கிராமவாசி.

---

மிராசுதார்களே! கிராமாபிமானிகளே !! கிராமத்தார்களே !!!

கேள்வி.—உங்களது தோழன் யார் ?

விடை:—"கிராம பஞ்சாயத்து" ஒன்றே.

கேள்வி:—வருட சந்தா என்ன ?

விடை:—ரூபாய் மூன்றுதான்.

விலாசம்:—மானேஜர் "கிராம பஞ்சாயத்து" ஆபீஸ், தெப்பக்குளம் போஸ்டு, திருச்சி.

## திருப்பளாத்துறை கூட்டுறவு சங்கம்.

(குளித்தலை யூனியனில் இணைக்கப்பட்டது.)

(சங்கத்தின் முன்னேற்ற நிலை.)

இச்சங்கம் 1914-ம் வருஷத்தில் ஆரம்பிக்கப்பட்டது. தற்சமயம் (30—6—27ல்) 148 மெம்பர்கள் இருக்கிறார்கள். அதில் ஆதி திராவிடர்கள் 9. பங்குத்தொகை ரூ 6520. மெம்பர்களும் மெம்பரல்லாதவர்களுமாக செய்திருக்கிற ஸ்திரதா டிபாஸிட்டு ரூ 32095. மாத டிபாஸிட்டு ரூ 1568-ம் க்ஷேமநிதி ரூ 4667-ம் இருக்கிறது.

சங்கம் தற்சமயம் ஜில்லா பாங்கில் கடன்வாங்காமலே வேலை செய்துவருகிறது. தற்சமயம் அதிகமாக வரும் ஸ்திரதா டிபாஸிட்டுகளைக்கூட வாங்கவேண்டாமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

சங்கத்தில் மெம்பர்களால் கெடுகடந்த கடன்களே கிடையாது. இதற்குக்காரணம் மெம்பர்கள் கூட்டுறவுமுறையை நன்கு தெரிந்துகொண்டிருப்பதுதான்.

ஒரு மெம்பர் சங்கத்தில் வாங்கக்கூடிய கடன் அளவை ரூ 3000க்கு அதிகாரிகள் உயர்த்தியிருக்கிறார்கள்.

இச்சங்கத்தினால் மெம்பர்களுக்கு அதிக சௌகரியமும், மெம்பர்களின் கூட்டுறவுமுறையினால் சங்கத்திற்கும் கூட்டுறவு இயக்கத்திற்கும் நல்லபெயரும் கிடைத்திருக்கிறது.

திருப்பளாத்துறை கூட்டுறவு சங்கம். (ஒப்பம்) கே. என். ரகுநாதஸ்வாமி அய்யர்,
பிரஸிடெண்டு.

---

"கிராம பஞ்சாயத்து" பத்திரிகையின் வருட சந்தா ரூபாய் மூன்று.
விலாசம்:—மானேஜர், "கிராம பஞ்சாயத்து,"
தெப்பக்குளம் P. O., திருச்சினாப்பள்ளி

## தஞ்சை பஞ்சாயத்து கான்பரென்ஸ்,

## TANJORE DISTRICT PANCHAYAT CONFERENCE.

தஞ்சாவூர் ஜில்லா கிராமப்பஞ்சாயத்து கான்பரென்ஸ் ஆகஸ்ட் மாதம் 10 தேதியன்று மன்னார்குடியில் முதல் மந்திரி டாக்டர் சுப்பராயன் அவர்களுடைய அக்கிராசனத்தின்கீழ் நடைபெற்றது. வரவேற்புக்கமிட்டியின் சேர்மன் ராவ்பகதூர் கே. ஜி. ஸ்ரீனிவாஸ முதலியார் அக்கிராசனாதிபதி, கான்பரென்ஸுக்கு வந்திருந்த டெலிகேட்டுகளையும் உபசரித்துப் பேசுகையில், "நமது தேசம் அபிவிருத்தியடைய வேண்டுமானால் கிராமப் பஞ்சாயத்துச்சபைகள் ஏராளமாக ஏற்படுத்தப்பட்டு, நேர்மையான முறையில் நடைபெறவேண்டும். நாம் சுயராஜ்யம் பெறுவதற்குக் கிராமப் பஞ்சாயத்துக்கள்தான் அஸ்திவாரம். மகாசபைகள் கூட்டித் தீர்மானங்கள்செய்து மேடைகளில் பிரசங்கங்கள் செய்வதினால் பிரயோஜனம் ஒன்றுமில்லை. நமது நாட்டின் விவசாயமோ, வியாபாரமோ அபிவிருத்தியடையவேண்டுமானால், இதர தேசத்தார்களோடு போட்டி போடவேண்டுமானால், கிராமப் பஞ்சாயத்துக்களை தகுந்த அஸ்திவாரத்தில் ஏற்படுத்தி நடத்திவரவேண்டும்" என்று தமது அபிப்பிராயத்தைத் தெரிவித்தார். ஏனெனில், "நாம் சுய ஆட்சியோ, சுயராஜ்யமோ பெற வேண்டுமென்று நமக்கு உறுதியிருக்கும்பட்சத்தில் முதன்முதல் கிராம சமுதாய அபிவிருத்தி ஏற்படவேண்டும். கிராமங்களிலிருந்துதான் நாட்டிற்கு நன்மையளிக்கக்கூடிய விஷயங்களெல்லாம் கிளம்பவேண்டும். தேசபக்தியும், தேசஸேவையும், சமூக ஊழியமும் கிராமங்களிலிருந்தே தான் நாம் சரியான முறையில் கற்றுக்கொள்ளமுடியும். பஞ்சாயத்துக்கள் பலப்பட்டு நாடெங்கும் பரவினால் அவைகளின் வாயிலாக நாம் பெரிய காரியங்களை ஸாதித்து தேசவிடுதலைக்கு உதவியளிக்கலாம்."

டாக்டர் சுப்பராயன் அவர்கள் தமது பிரசங்கத்தில் நமது தேசம் முற்போக்கான வழியில் செல்லவேண்டுமானால், பஞ்சாயத்துச் சபைகள் நன்றாகவும் திறமையாகவும் அமைக்கப்பட்டு நடத்தப்படவேண்டுமென்று வரவேற்புத்தலைவர் கூறியதை தாம் அங்கீகரிப்பதாயும் அவர் கூறியபடி எல்லாவற்றிற்கும் கிராமத்தில்தான் விதை தெளிக்கப்படவேண்டுமென்றும் தெரிவித்தார்.

"கிராமஜனங்கள் பஞ்சாயத்துக் காரியங்களைச் சரியான முறையில் கற்றுக்கொண்டால்தான் அதன்மூலமாக தேசநிர்வாக காரியங்களை

சாதித்துக்கொள்ளமுடியும். கிராமாந்திர ஜனங்களே அதிகமாக வோட்டர் களாகவிருக்கின்றூர்கள். அவர்கள் அதன் மதிப்பையும் உபயோகத்தையும் சரியானபடி அறிந்து நடந்துகொள்ளாமற்போனுல் சுய ஆட்சிக்கு லாயக் கில்லையென்றுகிவிடும். கிராமப் பஞ்சாயத்துக்கள்மூலமாக மகத்தான பலன்கள் ஏற்படப்போகின்றன. தேசமெல்லாம் கிராம பஞ்சாயத்து சபைகள் ஏற்படுமாறும், அவை சரியானபடி வேலைசெய்யுமாறும் எல்லோ ரும் சிரத்தையெடுத்துக்கொள்ள வேண்டுகிறேன்.” என்று பேசினுர்.

## தீர்மானங்கள்.

கான்பரென்ஸில் அடியில்கண்ட முக்கியமான தீர்மானங்கள் செய் யப்பட்டன:—

5.

1. கிராம உத்தியோகஸ்தர்களின் முக்கியமான வேலைகளை இப் பொழுது கிராமப் பஞ்சாயத்தார்களே கவனித்துவருவதால், கிராம வெட்டிகள் மூவரில் ஒருவனை பஞ்சாயத்துக்கு வேலை பார்க்கும்படிக்கும் கிராம முன்சீப் கர்ணத்திற்கு மற்ற இரண்டு வெட்டிகளும் இருந்துவருகிற தென்றும் கவர்ன்மெண்டார் உத்திரவு செய்ய இந்த கான்பரன்சு கேட்டுக் கொள்ளுகிறது.

2. ஸ்தலஸ்தாபனங்கள் அல்லது பி. டபிள்யூ. டி. யாரால் கிராமங் களில் செய்யப்படும் ஒவ்வொரு மராமத்து அல்லது இதர வேலைகளும் பஞ்சாயத்தைக் கலந்துகொண்டு செய்யவேண்டுமென்றும் மேற்படி வேலை களை பஞ்சாயத்தாரே செய்யத் தயாராக இருந்தால் எஸ்டிமேட்டுப்படி வேலைகளைச் செய்துமுடிக்கத் தொகைகளை அவர்களிடம் ஒப்புவிக்க வேண்டுமென்றும் கவர்ன்மெண்டாரை இந்த கான்பரன்சு கேட்டுக் கொள்ளுகிறது.

3. பஞ்சாயத்தார்கள் செய்யும் ஒவ்வொரு வேலைசம்பந்தமாயும் எஸ்டிமேட்டுகள் தயார் செய்யப் பஞ்சாயத்துகள் வேண்டுகோளின்படி ஜில்லா போர்டு பிரஸிடெண்ட் அல்லது இஞ்சினியர் தங்கள் கீழ் ஆபீசர் களைக்கொண்டு உதவிசெய்யும்படியாய் விதிகள் ஏற்படுத்தும்படி இந்த கான்பரன்சு கேட்டுக்கொள்ளுகிறது.

4. பஞ்சாயத்துக் கோர்ட்டாரால் விதிக்கப்படும் அபராதத் தொகை களை வசூல்செய்து கிராம பஞ்சாயத்தார்களிடம் கொடுத்துவிட வேண்டு மென்று கவர்ன்மெண்டார் உத்திரவு செய்யும்படி இந்த கான்பரன்சு கேட் டுக்கொள்ளுகிறது.

5. கிராம சமுதாய வரும்படிகளை வழக்கப்படி நடத்தவேண்டிய செலவுகள்போக மிராசுதார்களின் மெஜாரிட்டியின் அபிப்பிராயத்தை அனுசரித்து பாக்கித்தொகைகளை இதர செலவுகள் செய்யவும், சமுதாய சொத்துக்களை பஞ்சாயத்திலேயே பரிபாலித்து வருவதற்கு கவர்ன்மெண்டில் விதிகள் ஏற்படுத்தவேணுமாய் இந்த கான்பரன்சு கேட்டுக்கொள்ளுகிறது.

6. இரண்டாவது உத்தியோகஸ்தர் நியமித்து இருக்கும் பஞ்சாயத்து ஸ்கூல்களில் தளவாட சாமான்களுக்காக கிராண்டு கொடுக்கும்படியாக கவர்ன்மெண்டாரை இந்த கான்பரன்சு கேட்டுக்கொள்ளுகிறது.

7. ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் கவர்ன்மெண்டாரால் வசூலிக்கப்படும் நிலவரியிலிருந்து கிராமத்தின் பொது நன்மைக்காக, மிகவும் சிறிய பாகம்கூட செலவழிக்கப் படுவதில்லையாகையாலும், பஞ்சாயத்துகளிலேயே தனியாக வரிகள் போட்டு, கிராமத்தின் நன்மைக்காக வசூலித்து செலவிடப்படவேண்டியிருப்பதாலும், இனி கவர்ன்மெண்டார் ஒவ்வொரு கிராமத்திலிருந்தும், வசூல் செய்யும் நிலவரியிலிருந்து ரூபாய்க்கு மூன்று பைசா வீதமாவது கிராமப் பஞ்சாயத்தாரிடம் கிராமப் பொதுச் செலவிற்காக கொடுத்துவிடும்படி இந்த கான்பரன்சு கேட்டுக்கொள்ளுகிறது.

8. கவர்ன்மெண்டு லோகல் போர்டார் வசூலிக்கும் தொகைகள் தவிர பஞ்சாயத்தில் வசூலிக்கும் எல்லா வரிகளின் தொகைக்குச் சமானமாய்க் கவர்ன்மெண்டார் ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் ஒரு வருடாந்திர கிராண்டு கொடுக்கவேண்டுமென்று இந்த கான்பரன்சு கேட்டுக்கொள்ளுகிறது.

9. (a) தாலூக்கா போர்டு மெம்பர் தேர்ந்தெடுக்கும் ஒவ்வொரு சர்க்கிளுக்கும் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் ஏற்படுத்தவேண்டுமென்றும், எந்த சர்க்கிளிலாவது ஒரு மெம்பருக்கு மேலிருந்தால், எவ்வளவு மெம்பர்கள் இருக்கிறார்களோ அவ்வளவு யூனியன்கள் அந்த சர்க்கிளில் ஏற்படுத்தவேண்டுமென்றும் இந்த கான்பரன்சு முடிவுசெய்கிறது.

(b) பஞ்சாயத்து யூனியன்கள், கீழ்கண்ட வேலைகளை கவனிக்கிறதென்று இந்த கான்பரன்சு தீர்மானிக்கிறது.

1. ஒன்றுக்கு மேற்பட்ட பஞ்சாயத்துக்களால் செய்யவேண்டிய பொது வேலைகளைக் கவனிப்பது.

2. வைத்தியசாலைகள் நடத்துவது.

3. பொது வாய்க்கால்கள் வெட்டுவதும், ரோடுகள் மராமத்து பார்ப்

மேல்கண்ட வேலைகளை நடத்த பஞ்சாயத்துகளில் பாதி செலவையும் கவர்ன்மெண்டில் பாதி செலவையும் பொறுத்துக்கொள்ளவேண்டுமென்று இந்த கான்பரன்சு தீர்மானிக்கிறது.

10. பஞ்சாயத்து யூனியன்கள் சரிவர நடைபெறுவதற்கு ரெஜிஸ்டிரார் ஜெனரல் அவர்கள் நல்லவன் ஏற்படுத்தி கவர்ன்மெண்டில் கொடுக்க வேண்டிய தொகைக்கு அவர்களே எழுதி சாங்ஷன் பெறவேண்டுமென்று இந்த கான்பரன்சு அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறது.

11. எந்த பஞ்சாயத்துக்காவது வரி செலுத்தவேண்டிய ஒருவர் வெளியிடத்தில் வசித்துக்கொண்டிருந்தால், அவர் இருந்துவரும் ஊர் கிராம முன்சீப் அவரிடம் வரியை வசூல் செய்து சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்குச் செலுத்துவதற்கு ஏற்பாடு செய்ய கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொள்ள, இந்த கான்பரன்சு தீர்மானிக்கிறது.

12. இந்த ஜில்லாவில் ரோட்டுகள் போடவும், மராமத்து செய்யவும் மிகவும் செலவாகிறபடியால் எந்தப் பஞ்சாயத்திலிருந்தாவது அயன் ரஸ்துவுக்கு ரோடு போடவேண்டியிருந்தால் அந்தப் பஞ்சாயத்திலேயே அதற்காக ஏற்பாடு செய்வது என்றும், அதற்கு ஆகும் மொத்தச் செலவில் $\frac{3}{4}$ பங்கு கவர்ன்மெண்டார் கொடுக்கவேண்டுமென்றும், பாக்கி $\frac{1}{4}$ பங்குக்காக பஞ்சாயத்தில் கிலக்கொடுப்பது அல்லது வேலைக்கு ஆட்கள் அனுப்புவது மூலமாய் பொறுத்துக்கொள்ளவேண்டுமென்று இந்த கான்பரன்சு தீர்மானிக்கிறது.

13. பி. டபிள்யூ. டி. ரெவினியூ டிபார்ட்மெண்டார் வாய்க்கால் மதகு பாலத்தின் சாவியையும், மதகு பலகைகளையும் கிராம பஞ்சாயத்தார் சா ஜில் கொடுக்கவேண்டுமென்றும, மேற்படி வாய்க்கால் பல கிராமங்களுக்குப் பொதுவாக இருந்தால் எல்லா பஞ்சாயத்துகளும் சேர்ந்து நியமிக்கும் ஒரு பஞ்சாயத்தினிடம் ஒப்புவிக்கவேண்டுமென்றும், இந்த கான்பரன்சு தீர்மானிக்கிறது.

---

மிராசுதார்களே ! கிராமாபிமானிகளே !! கிராமத்தார்களே !

கேள்வி.—உங்களது தோழன் யார் ?
விடை :—" கிராம பஞ்சாயத்து " ஒன்றே.
கேள்வி :—வருட சந்தா என்ன ?
விடை :—ரூபாய் மூன்றுதான்.

விலாசம் :—மானேஜர் " கிராம பஞ்சாயத்து " ஆபீஸ்,
தெப்பக்குளம் போஸ்டு, தி

# பஞ்சாயத்தும் வெளி உதவியும்.

## PANCHAYATS AND OUTSIDE HELP.

(பஞ்சாயத்து ரெஜிஸ்டிரார் ஜெனரல் ராவ்பகதூர் என். கோபாலஸாமி அய்யங்கார் செய்த பிரஸங்கம்.)

சென்ற மாதம் மன்னார்குடியில் நடந்த தஞ்சை ஜில்லா கிராம பஞ்சாயத்துக் கான்பரென்ஸில் பஞ்சாயத்து ரெஜிஸ்டிரார் ஜெனரல் ராவ்பகதூர் என். கோபாலஸாமி அய்யங்கார் அவர்கள் பொதுவாய் பஞ்சாயத்தைப்பற்றியும், பஞ்சாயத்தார் பிற உதவியை எதிர்பார்ப்பதைப் பற்றியும் பின்வருமாறு பிரசங்கம் செய்தார்:—

பஞ்சாயத்தென்பது நமக்கு ஒரு புது ஸ்தாபனமாகும். பழைய காலத்தில் நமது நாட்டில் கிராமங்கள்தோறும் பஞ்சாயத்து இருந்தது வாஸ்தவந்தான். ஆனால் நடுவில் அந்த ஸ்தாபனங்கள் யாவும் அழிந்து போய்விட்டன. அவைகளின் அதிகாரங்களும், வேலைகளும் இப்பொழுது கவர்ன்மெண்டு ஜில்லா போர்டு, தாலூகா போர்டு இவைகளால் நடத்தப் பட்டு வருகின்றன. அவ்விதமான எல்லா வேலைகளையும் அதிகாரங்களையும் திரும்பவும் கிராமத்தாரிடம் கொண்டுவந்து சேர்ப்பதுதான் கிராம பஞ்சாயத்தின் முக்கிய நோக்கம். இந்த இயக்கம் ஆரம்பித்து 4, 5 வருஷங்களாகின்றன. லோகல்பாடிகளோ, கவர்ன்மெண்டோ, உத்தியோகஸ்தர்களோ, உத்தியோகஸ்தரல்லாதவர்களோ யாராயிருந்தாலும் தங்கள் கையிலிருக்கும் அதிகாரங்களை சுலபமாகக் கொடுத்துவிடமாட்டார்கள். உடனே கேட்டதெல்லாம் கிடைத்துவிடுமென்று நினைப்பது ஏமாற்றத்தைக் கொடுக்கக்கூடியதாகும். அனேகம் பஞ்சாயத்துக்கள் ஆரம்பிக்கப்பட்டும் அவைகளுக்குச் சரியான சாதனங்களில்லையென்றும் நிலவரியில் ஒரு அம்சம் கொடுத்தால்தான் பஞ்சாயத்து நிலைபெற்று நிற்குமென்றும், இல்லாவிட்டால் ஒன்றும் பயன்படாதென்றும் சொல்வது சரியல்ல. மேலும் அது என் அனுபவத்திற்கு முற்றிலும் விரோதமாக இருக்கிறது. 4, 5 வருஷங்களாக கவர்ன்மெண்டார் அமமாதிரி யாதொரு தொகையும் கொடுக்கவில்லை. அத்தொகை இல்லாமலே பஞ்சாயத்துக்கள் அபிவிருத்தியடைந்துவருகின்றன. மேன்மேலும் அதிகமாக அபிவிருத்தியேற்பட[illegible] காரணம் ஜனங்களுடைய ஊக்க[illegible] 1-க்கு [illegible] ரூபாய்மட்டும் கொடுத்துவிட்ட[illegible] எவ்வாறு போது[illegible]

224315

விருக்கும்? ஜனங்களிடமிருந்து வசூலிக்கப்படுகிற இதர வரிகள் எல்லாம் வேறு செலவுகளுக்கு உபயோகப்பட்டுவருகிறது. நாம் செய்ய வேண்டியது என்னவென்றால், வெளிப்பணத்தை எதிர்பார்க்காமல் வேண்டிய சாதனங்களை நாமே தேடிக்கொள்ளவேண்டியது அவசியம். ஒரு விஷயம்மட்டும் மிகவும் முக்கியமானது. நாம் தீர்மானங்கள் செய்துவிட்டோ மென்று பேசாமலிருந்துவிடுவதில் பிரயோஜனமில்லை. தீர்மானங்களில் கண்டபடி எல்லாம் நடைபெறவில்லையே என்று நாம் அசிரத்தை அடைந்துவிடாமல் பஞ்சாயத்தின் உண்மைக் கொள்கையை அறிந்து முயற்சியுடன் வேலை செய்துவரவேண்டும். பஞ்சாயத்து கோர்ட்டு அதிகாரத்தை நடத்தும் ஸ்தானம, கிராம பஞ்சாயத்துகளோ, கிராம ஊழியம், தேச சேவைபுரியும் ஸ்தாபனங்கள். அசிரத்தையினாலும், ஏமாற்றத்தினாலும் வேலையை நிறுத்திவிடுவது பஞ்சாயத்தின் கொள்கைக்குச் சரியாகாது. ஏமாற்றம் ஏற்பட்டபோதிலும் கொஞ்சம் கூடப் பின்வாங்காமல் நடத்துவதுதான் புருஷத் தன்மையாகும்.

---

## கிராமப்பஞ்சாயத்துகளின் நிர்வாக அறிக்கை.

## REPORT ON THE WORKING OF VILLAGE PANCHAYATS.

**1926-ம்** வருஷம் மார்ச்சு-மீ 31-ம் தேதியோடு முடிவடைந்த வருஷத்தில் சென்னை மாகாணத்திலுள்ள கிராமப்பஞ்சாயத்துகளின் நிர்வாகத்தைப்பற்றி பஞ்சாயத்துகளின் ரெஜிஸ்டிரார் ஜெனரலாகிய ராவ்பகதூர் என். கோபாலசுவாமி அய்யங்கார் கவர்ன்மெண்டுக்கு ஒரு யாதாஸ்து அனுப்பியிருக்கிறார். அதன் ஸாராம்சம் வருமாறு :—

### பஞ்சாயத்துகள் வியாபகமடையாததற்குக் காரணம்.

வெளி ஜில்லாக்களில் பஞ்சாயத்துகள் சம்பந்தமான வேலைகள் தாலூகா போர்டு பிரஸிடெண்டுகளிடத்திலும், கௌரவ நிர்மாணகர்களிடத்திலும இருந்துவந்திருக்கின்றன. வருஷக்கடைசியில் 6[illegible] கௌரவ நிர்மாணகர்களிருந்தனர். ஆனால் அவர்களில் பெரும்பாலோர் தொடர்ந்து சிரத்தையுடன் வேலைசெய்[illegible]வில்லை. அந்தவேலைக்கு அடிக்கடி சற்[illegible] பிரயாணம் செய்யவேண்டியிருக்கிறது. அதற்கு செலவு ஏற்படுகிற[illegible]



அந்தச்செலவு இப்பொழுது கௌரவ நிர்மாணகர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. தேசோத்தாரண வேலைகளை சம்பளமன்னியில் செய்வதற்கு [illegible]ண்டிய மனிதர்கள் தேசத்தில் இருக்கிறார்கள். தனவந்தர்களைக் [illegible]டிலும் சாமான்யர்களுடனேதான் அத்தகையோரின் தொகை அதிகமாக இருக்கிறது. அத்தகைய மனுஷ்ய ஸகாயத்தை பஞ்சாயத்துவேலை போன்ற காரியங்களுக்கு உபயோகித்துக்கொள்ளவேண்டுமானால், அத்தகையவர்களை இந்தவேலைக்காக எடுத்துக்கொண்டபிறகு அவர்கள் கட்டுப்பாடாகவும், ஒழுங்காகவும், ஏற்பாடாகவும் வேலைசெய்யவேண்டுமானால், அவர்கள் தாங்கமுடியாத தியாகங்களைச் செய்யும்படி சொல்லக்கூடாது. தர்ம காரியங்களில் ஈடுபட்டிருப்பவர்கள்கூட இவ்வளவு தியாகம் செய்ய வேண்டி வருவதில்லை. இவ்வித நிலைமையில் கௌரவ நிர்மாணகர்களில் பலர் ஆரம்பத்தில் காட்டிய ஊக்கத்தைக் கடைசிவரை காட்டாமலிருந்து வந்திருப்பதில் தோஷங்கூறுவதற்கில்லை. அவர்கள் இவ்வளவாவது செய்தார்களேயென்றும், அவர்களிற் சிலர் சிரமத்தையும பணச்செலவையும் கவனிக்காமல் கட்டுப்பாடாகவும், ஏற்பாடாகவும் வேலைசெய்தார்களேயென்றும் சந்தோஷப்படவேண்டும். கிராமங்களின் புனருத்தாரணத்திற்கு நாளடைவில் பஞ்சாயத்துகளே சரியான கருவிகளாக இருக்குமென்று அவர்கள் நம்புவதால்தான் இவ்வளவாவது அவர்கள் வேலை செய்திருக்கிறார்கள்.

### மொத்த பஞ்சாயத்துகளின் விவரம்.

இந்தவருஷ ஆரம்பத்தில் 579 பஞ்சாயத்துகள் ஏற்பட்டிருந்தன. இந்தவருஷ முடிவில் 933 பஞ்சாயத்துகள் இருந்துவருகின்றன. 22 ஜில்லாக்களில் 347 பஞ்சாயத்துகளை அமைக்க அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது.

முந்தின வருஷத்தைப்போலவே இவ்வருஷத்திலும் வருஷக்கடைசிக்குள் தேர்தல்கள் நடக்காததனாலோ, அல்லது கிராமத்தாருடைய அசிரத்தையினாலாவது அல்லது எதிரிப்பினாலாவது பஞ்சாயத்தார்கள் வேலைசெய்ய முடியாததாலோ நான்கிலொரு பஞ்சாயத்துக்கள் வேலை செய்யவில்லையென்று வைத்துக்கொள்ளலாம்.

இந்தவருஷக் கடைசியில் இருந்த 933 பஞ்சாயத்துகளில் தமிழ் ஜில்லாக்களின் தொகைமட்டும் வருமாறு :—

| | | | |
|---|---|---|---|
| வட ஆற்காடு | 276 | ராமனாதபுரம் | 88 |
| தென் ஆற்காடு | 59 | சேலம் | 38 |
| செங்கல்பட்டு | 37 | தஞ்சாவூர் | 75 |
| சித்தூர் | 47 | திருநெல்வேலி | 40 |
| கோயமுத்தூர் | 25 | திருச்சி | 66 |
| மதுரை | 58 | | |

பஞ்சாயத்துகளை ஏற்படுத்தும்விஷயத்தில் இருவகைப்பட்ட கொள்கைகள் அனுஷ்டிக்கப்பட்டுவருகின்றன. பஞ்சாயத்துகள் சிதறிக்கிடந்தாலும் மாகாணமெங்குமே பஞ்சாயத்துகளை ஏற்படுத்த முயற்சி செய்யப்பட்டிருக்கிறது. இரண்டாவதாக, கிராமந்தவறாமல் பஞ்சாயத்துகளை ஏற்படுத்துவதற்காக சில தாலூகா போர்டுகள் பொறுக்கப்பட்டிருக்கின்றன. 1924—25-ம் வருஷத்திய யாதாஸ்தில் வட ஆற்காடு ஜில்லா போளூர் தாலூகாவில்செய்த முயற்சியைப்பற்றி சொல்லியிருந்தேன். இந்தப்பரீக்ஷை செய்துபார்த்ததில் எதிர்பார்த்தபலன் கிடைக்கவில்லை. கௌரவ நிர்மாணகர்கள் கைச்செலவு ஏற்பட்டதை உத்தேசித்து தங்களுடைய ஊக்கத்தை தளர்த்திக்கொண்டுவிட்டதும், தாலூகா போர்டுகள் தகுந்த ஆதரவு அளிக்காமற்போனதுமே இதற்குக்காரணம். இந்தப்பிரதேசத்தில் இப்பொழுது நல்ல சூசகங்கள் காணப்படுகின்றன. கூடிய சீக்கிரத்தில் பஞ்சாயத்துகள் இந்தப்பிரதேசத்தில் தீவிரமாக வேலைசெய்யுமென்று எதிர்பார்க்கலாம். இந்தவருஷத்தில் மதுரை ஜில்லா மேலூர் தாலூகாவிலும், ராமநாதபுரம் ஜில்லா சாத்தூர் தாலூகாவிலும், தஞ்சை ஜில்லாவில் நன்னிலம், மன்னார்குடி தாலூகாக்களிலும், அனந்தப்பூர் ஜில்லாவில் அனந்தபூர், கல்யாணதுர்க்கம் தாலூகாக்களிலும், வடஆற்காடு ஜில்லாவில் செய்யாறு, வந்தவாசி இந்த தாலூகாக்களிலும் பஞ்சாயத்து நிர்மாணவேலை மும்முரமாகச் செய்யப்பட்டது. இவைகளில் சில இடங்களில் இந்தவருஷ ஆரம்பத்திற்குப்பிறகு ஜீமூதமாக வேலை நடந்திருக்கிறது.

பிரஸ்தாப வருஷத்தில் 39 கேஸ்களில் கிராமத்தார்கள் கூடிப் பஞ்சாயத்தாரைத் தெரிந்தெடுக்க மறுத்திருக்கிறார்கள். இதுபோன்ற நிலைமையைப் பரிகரித்துக்கொள்ளுவதற்கு இப்பொழுது மார்க்கமில்லாமலிருக்கிறது. சட்டம் திருத்தப்படும்வரை இந்த இடங்களில் தேர்தல்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன.

மூன்று பஞ்சாயத்துக்களின் அதிகார எல்லை விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது. மூன்று பஞ்சாயத்துகளின் எல்லை குறைக்கப்பட்டிருக்கிறது. 16 பஞ்சாயத்துகளில் பஞ்சாயத்தினர்களின் தொகை அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. ஒரு பஞ்சாயத்தில் குறைக்கப்பட்டிருக்கிறது.

## ஆதித்திராவிடர்களுக்குப் பிரதிநிதித்துவம்.

பிரசாரம் செய்ததன்பலனாகவும், தேர்தல்காலத்தில் நேரில் புத்தி சொன்னதன் பலனாகவும் ஆதித்திராவிடர்களைத் தெரிந்தெடுக்காமலிருப்பது வரவரக் குறைந்துவருகிறது. என்னிடம் கிடைத்திருக்கும் தகவல்களிலிருந்து ஆதித்திராவிடர்களாகவோ அல்லது ஆதி ஆந்திரர்களாகவோ



இருக்கும் 39 பேர்கள் 15 பஞ்சாயத்து சபைகளுக்குத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்களென்று தெரிகிறது. நடைமுதல் வருஷத்தில் வரவர அதிகமாக அவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டுவருகிறார்கள்.

## பஞ்சாயத்துகளின் நிர்வாகம்.

ஆபீஸ் சிப்பந்திகள், இடம், நிர்வாகம் இவைகளின் செலவு மிகவும் குறைவாகவே இருக்கும்படி செய்யப்பட்டிருக்கிறது. குமாஸ்தாக்களை வைத்துக்கொள்ளவும், பஞ்சாயத்து ஆபீஸ்களுக்காக வாடகைக்கு இடம் வைத்துக்கொள்ளவும் சக்தியுடையவைகளாகவிருந்த சில பஞ்சாயத்துகளைத் தவிர மற்றவைகள் இந்தச் செலவுகளைச்செய்ய அனுமதி கொடுக்கப்படவில்லை. என்னிடம் கிடைத்திருக்கும் தகவல்களிலிருந்து 24 பஞ்சாயத்துகளே குமாஸ்தாக்களை வைத்திருக்கின்றன. பஞ்சாயத்துகளில் இருக்கும் சொற்ப எழுத்துவேலை பிரசிடெண்டாலாவது, பஞ்சாயத்தார்களாலாவது செய்யப்பட்டுவருகிறது. உதவி தேவையாக இருந்த கேஸ்களில் உள்ளூர் கர்ணங்களாவது, உபாத்தியாயர்களாவது மாதம் 2 ரூபாய் முதல் 5 ரூபாய் வரையில் பெற்றுக்கொண்டு வேலைசெய்து வந்திருக்கிறார்கள்.

## பஞ்சாயத்து ஆபீஸ்.

எல்லா சமூகத்தினரும் வரக்கூடிய பொதுஸ்தலத்தில் பஞ்சாயத்து ஆபீஸ்களை வைத்துக்கொள்ளும்படியும், பஞ்சாயத்துக்கூட்டங்களை நடத்தும்படியும் உத்தரவு செய்யப்பட்டிருக்கிறது. முந்தின வருஷத்தைப் போலவே போர்டு ஆரம்பப்பாடசாலை, கிராமச்சாவடி, பொது சத்திரம், ஆலமரத்து மேடை, கோயில் வாசல் இந்த இடங்கள் உபயோகிக்கப்பட்டு வந்திருக்கின்றன. பஞ்சாயத்துகள் பஹிரங்கமாகக் கூட்டங்களை நடத்தும்படியும், ஓட்டுக்கொடுப்பதில் பஞ்சாயத்தாரல்லாதவர்கள் கலந்துகொள்ளாவிடினும் விவாதத்தில் அவர்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்துக்கொள்ள அனுமதிக்கும்படியும் பஞ்சாயத்துகளுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த வழக்கமானது கிராம சம்பிரதாயத்தை அனுசரித்திருக்கிறது. இதனால் தவறான வழியில் செல்லும் பஞ்சாயத்தார்களுக்கு ஒருதடை ஏற்பட்டிருப்பதுடன், பஞ்சாயத்து நடவடிக்கைகளைப்பற்றி அகாரணமாக தோஷங்கூறுவதற்கும் இடமில்லாமற் செய்யப்பட்டிருக்

## பஞ்சாயத்துகள் செய்துவரும் வேலை.

பஞ்சாயத்துகள் இன்னின்ன வேலைகளைச் செய்யவேண்டுமென்ற நிர்ப்பந்தம் ஏதுவும் இப்பொழுது இல்லை. பல பஞ்சாயத்துகள் வேலைகளிற்

பலவற்றை ஏற்றுக்கொண்டு, அவைகள் ஒவ்வொன்றையும் சரியாகச் செய்து வருகின்றன. சில பஞ்சாயத்துகள் சப்பாத்திக்கள்ளிகளை அகற்றுதல், ரஸ்தாப்போடுதல், பாசன வாய்க்கால்களை வெட்டுதல், புத்தகசாலையை ஏற்படுத்துதல் முதலிய வேலைகளைமட்டில் செய்துவருகின்றன. ஆகவே எல்லா பஞ்சாயத்துகளும் ஒரேவிதமாக வேலைசெய்கின்றனவென்பதில்லை. ஆயினும் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு அலுவலும் எந்தப் பஞ்சாயத்தாலேனும் செய்யப்பட்டுவருகிறது.

புதிய கிராம ரஸ்தாக்களைப்போடுதல், கிராமத்தில் தெருக்களையும், ரஸ்தாக்களையும் துப்புரவுசெய்து அபிவிருத்திசெய்தல், நடைபாதைகளில் பரவி, வழியை அடைத்துவிட்ட சப்பாத்திக்கள்ளியை அகற்றுதல் முதலிய வேலைகளை முந்தின வருஷத்தைவிட அதிகப்பஞ்சாயத்துகள் இந்த வருஷத்தில் செய்திருக்கின்றன. குடிமராமத்து முறையில் கிராம ஆட்களைச் சேர்த்து சப்பாத்திக்கள்ளியை எடுத்தல், ரஸ்தாக்களைப் பழுதுபார்த்தல் முதலிய வேலைகள் செய்யப்பட்டிருக்கின்றன. சில கேஸ்களில் பொது வருமானம் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. வேறு சில கேஸ்களில் ரஸ்தாக்களைப்போடுதல், ரஸ்தாக்களை அபிவிருத்திசெய்தல் இவைகளுக்கு ஸ்பெஷல் வரி விதிக்கப்பட்டிருக்கிறது. கிராம ரஸ்தாக்களுக்காக லோகல் போர்டுகளுக்கு கவர்ன்மெண்டார் கிராண்டுத்தொகையாகக் கொடுத்த 6·25 லக்ஷம் ரூபாயில் சொற்பத்தொகையாகிய 8710 ரூபாயே கிராமப் பஞ்சாயத்துகளுக்குக் கிடைத்திருப்பதாகத்தெரிகிறது இந்த கிராண்டு தொகையை யாவது அல்லது பெரும்பாகத்தையாவது பஞ்சாயத்துக்களுக்காக ஒதுக்கி வைக்கும்படியாவது அல்லது பஞ்சாயத்துகளின் விண்ணப்பங்களுக்கு முன் பாத்தியம் கொடுக்கவேண்டுமென்ற நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தவேண்டுமென்றாவது செய்த முயற்சியே பலிதமடையாததால் இத்தகைய நிலைமை ஏற்படக்கூடியதுதான். 20 தாலூகா போர்டுகள் பஞ்சாயத்துகளின் எல்லைக்குட்பட்ட ரஸ்தாக்களை பஞ்சாயத்துகளிடம் ஒப்புவித்து அவை களின் பராமரிப்புச்செலவையும் பஞ்சாயத்துகளிடம் கொடுத்திருக்கின்றன. சில பஞ்சாயத்துகள் லோகல் போர்டுகளிடம் கண்டிராக்டு ஒப்புக்கொண்டு ரஸ்தா வேலையைச் செய்து, அதில் கிடைத்த லாபத்தை பஞ்சாயத்து நிதியில் சேர்த்திருக்கின்றன.

## பல விருக்ஷங்கள்.

சாலை ஓரங்களில் மரம் வைக்கும் விஷயத்திலும், தோப்புகளை ஏற்படுத்தும் விஷயத்திலும் பொதுவாக சிரத்தை ஏற்படாதபோதிலும் சிறிது அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. 25 தாலூகா போர்டுகள் தங்களுடைய எல்லைக்குள் தங்களுடையதாகவிருக்கும் மரங்களின் பராமரிப்

யையும், அவைகளின் வருமானத்தையும் பஞ்சாயத்துகள் இருக்குமிடத்தில் பஞ்சாயத்துகளிடம் ஒப்புவித்திருக்கின்றன. மூன்று ஜில்லா போர்டுகள் சில குறிப்பிட்ட பஞ்சாயத்துகளின் எல்லைக்குள்ளிருந்த தங்களுடைய காய்ப்பு மரங்களைப் பஞ்சாயத்துகளிடம் ஒப்புவித்திருக்கின்றன. பஞ்சாயத்து எல்லைக்குள்ளிருக்கும் தங்களுடைய காய்ப்பு மரங்களை பஞ்சாயத்துகளிடம் மாற்றிவிடுவதென்று தஞ்சாவூர் ஜில்லா போர்டார் பொதுவாகத் தீர்மானம் செய்திருக்கின்றனர்.

பிரஸ்தாப வருஷத்தில் 23 பஞ்சாயத்துகள் இராக்காலங்களில் வீதிகளில் விளக்குப்போட்டு வருகின்றன.

## ஆரம்பப் பாடசாலைகளின் மேன்பார்வை.

8—10—23-தேதியுள்ள 1424-ம் நம்பர் கவர்ன்மெண்டு உத்தரவின்படி பஞ்சாயத்துகளின் எல்லைக்குள்ளிருக்கும் உதவிபெறும் ஆரம்பப்பாடசாலைகளின் மேற்பார்வை அதிகாரம் பஞ்சாயத்துகளுக்கு ஏற்பட்டிருக்கிறது. வருஷாந்திர கிராண்டு தொகைகளுக்காக பரிசோதனை அதிகாரிகள் சிபார்சு செய்யுமுன் பஞ்சாயத்துகளைக் கலந்துகொள்ளவேண்டும். இம்மாதிரி சில கேஸ்களில்தான் செய்யப்பட்டிருக்கிறது. பல பஞ்சாயத்துகள் தங்களுடைய அதிகாரங்களையும் கடமைகளையும் உணராததால் கவர்ன்மெண்டு உத்தரவை அவைகள் தங்களுக்கு அனுகூலமான வழியில் உபயோகித்துக்கொள்ளவில்லை. கல்வி இலாகா பரிசோதனை அதிகாரிகளும் பஞ்சாயத்துகள் வேலை செய்துவரும் விவரங்களைத் தெரிந்துகொள்ளமாலிருந்திருக்கிறார்கள். தனிப்பட்ட நபர்களும் பஞ்சாயத்துகளின் ஆதிக்கத்திற்குட்படுவதற்குச் சுலபமாகச் சம்மதிப்பதில்லை. இருந்தாலும் கவர்ன்மெண்டு உத்தரவில் கண்டபடி பஞ்சாயத்துக்கள் மேன்பார்வை நடத்திவருவதால் உதவிபெறும் தனிப்பட்ட நபர்களின் பாடசாலைகளின் நிர்வாகம் செம்மைப்படும். இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் விஷயத்தில் தயங்கிக்கொண்டிருக்கும் பஞ்சாயத்துகள் இந்த பொறுப்பை ஏற்றுக்கொள்ளும்படி செய்வதே புத்திசாலித்தனமான காரியமாகும்.

9—11—23-தேதியுள்ள என்னுடைய டி. டிஸ் 380-வது உத்தரவில் கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு பல தாலுக்கா போர்டு பாடசாலைகளை மேன்பார்வை பார்க்கும் அதிகாரம் பஞ்சாயத்துகளிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்துகள் நியமனம் செய்துள்ள ஸ்பெஷல் பாடசாலைக் கமிட்டிகள் இந்த வேலையைச் செய்துவருகின்றன. இதன் பலனாக பல பாடசாலைகளில் மாணவர்களின் தொகையும் நிர்வாகத் திறமையும் அதிகரித்திருக்கிறது. இந்தப் பாடசாலைக் கமிட்டிகளில் சில

தங்களுடைய ஜோலிகளைக் கவனிக்காமல் இருந்திருக்கின்றன; வேறுசில கமிட்டிகள் தங்களுடைய அதிகாரத்தை மீறிப்போயிருக்கின்றன. இருந்தாலும் இத்தகைய கேஸ்கள் குறைவுதான். போர்டு பாடசாலைகளின் நிர்வாகத்தில் பஞ்சாயத்துகளை சம்பந்தப்படுத்தியதால் பொதுவாக அந்தப் பாடசாலைகளின் செல்வாக்கும், திறமையும் அதிகரித்திருக்கின்றன. சில தாலூகா போர்டுகள் தங்களுடைய எல்லைக்குள் ஏற்பட்ட ஒவ்வொரு பஞ்சாயத்திடமும் அதன் எல்லைக்குட்பட்ட போர்டு பாடசாலைகளின் மேண்பார்வை அதிகாரத்தை ஒப்புவித்திருக்கையில், வேறு வேறு சில தாலூகா போர்டுகள் தயங்கிக்கொண்டு அவ்விதம் செய்ய மறுத்தோ அல்லது சில பஞ்சாயத்துகளிடம்மட்டில் ஒப்புவித்தோ இருக்கின்றன. சில தாலூகா போர்டுகள் பஞ்சாயத்துகள் இதர துறைகளில் சரியாக வேலை செய்துவருகின்றனவா வென்பதைத் தெரிந்துகொண்டு பாடசாலைகளின் மேற்பார்வையை அவைகளிடம் ஒப்புவிக்கலாமென்று தீர்மானம் செய்திருக்கின்றன. என்னுடைய சுற்றுத்தரவில் கண்டபடி மேற்பார்வை அதிகாரத்தை மட்டில் பஞ்சாயத்துகளிடம் ஒப்புவிக்கும் விஷயத்தில் இவ்விதம் தாலூகா போர்டுகள் பயப்பட்டிருப்பதற்குக் காரணமேயில்லை.

சுமார் 12 பஞ்சாயத்துகள் தாங்களே பள்ளிக்கூடங்களை வைத்து நடத்தி வழக்கமான விகிதப்படி ஜில்லாக் கல்விச்சபைகளிடம் கிராண்டு பெற்றிருக்கின்றன. நடைமுதல் வருஷத்தில் பாடசாலைகள் இல்லாத இடங்களில் பஞ்சாயத்துப் பாடசாலைகள் 800 வரையில் ஏற்படுத்தியதில் ஆரம்பக்கல்வித் துறையில் விசேஷ அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது.

## புத்தக சாலைகள்.

கல்வி இலாகா மந்திரி என்னுடைய ஆதீனத்தில் வைத்த 8000 ரூபாயைக்கொண்டு பிரஸ்தாப வருஷத்தில் பஞ்சாயத்துப் புத்தகசாலைகளை ஏற்படுத்தும் வேலைக்கு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டிருக்கிறது. அடியிற் கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு இந்த கிராண்டானது கொடுக்கப்பட்டிருக்கிறது :—

1. புத்தகசாலையை வைத்திருக்கும் இடத்தை பஞ்சாயத்தார் கொடுக்கவேண்டும்; அது எல்லா சமூகத்தினரும் வரக்கூடிய இடமாக இருக்கவேண்டும்.

2. அதற்கு வேண்டியிருக்கும் இதர வசதிகளையும் பஞ்சாயத்துகளே செய்துகொடுக்கவேண்டும்.

3. இவைகளைத்தவிர பஞ்சாயத்துகள் எவ்வளவு தொகை மான்யமாக வேண்டுமென்று கோருகின்றனவோ அதற்கு சரிசமத்தொகையான

தொகையை பஞ்சாயத்துகள் ரொக்கமாகவோ, புஸ்தகங்கள் ரூபமாகவோ கொடுக்கவேண்டும்.

4. கவர்ன்மெண்டு இரண்டையும் பஞ்சாயத்தார் கொடுக்கும் தொகையையும் புத்தகங்களை வாங்குவதற்காகவே செலவிடவேண்டும்.

19 ஜில்லாக்களில் 103 பஞ்சாயத்துகள் இந்த நிபந்தனைகளுக்குட்பட்டுப் புதிதாக புத்தகசாலைகளை ஏற்படுத்தவோ, அல்லது பழைய புத்தகசாலைகளை அபிவிருத்தி செய்யவோ மானியங்கள் பெற்றிருக்கின்றன. மொத்தம் 7996 ரூபாய் இந்த இனத்தில் விநியோகிக்கப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்துப் புத்தகசாலைகளுக்கு பிரஸ்தாப வருஷத்தில் 20000 ரூபாய் பெறுமான புஸ்தகங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றனவென்று சொல்லலாம். 13 பஞ்சாயத்துகள் வாசகசாலைகளையும் நடத்திவருவதாக அறிவித்திருக்கின்றன. (சுதேச மித்திரனிலிருந்து சுருக்கி எடுக்கப்பட்டது.)

---

## நிலச்சுவான்தார்களின் சங்கங்களின் அவசியம்.

உலகத்தின் எந்த தேசத்திலும் இராஜாங்கத்தின் ஆட்சிக்கு முக்கிய ஆதாரமாயிருப்பவர்கள் மிராசுதார்கள்—நிலச்சுவான்தார்கள்—என்பது பல நூல்களாலும் விளங்கும். இம்மாதிரியே மிராசுதாரர்களின் பாதுகாப்பிற்கும் இராஜாங்கம் அவசியமே.

2. இவர்களுக்குள் ஒற்றுமை எங்கு விருத்தியாகிவருகிறதோ அந்த இராஜாங்கத்தின் அமைப்பும் அபிவிருத்தியும் சிலாக்கியமாயிருந்துவருவதுடன் மிராசுதாரர்களின் ஐசுவரியமும் செல்வாக்கும் அபிவிருத்தியடைந்தும் வருகிறது.

3. இராஜாங்க செலவுகளுக்காக இதரவழிகளிலிருந்தும் வரும்படி கிடைப்பதாயிருக்கும் மற்ற கைத்தொழில்களைக்காட்டிலும் விவசாயம்

லாபகரமில்லாத தொழிலாயினும் நிலவரியே அதிகரித்துக்கொண்டு வருகிறது.

4. இராஜாங்கத்தின் தோரணையும் நடவடிக்கைகளும் சிலகாலமாக மிராசுதார்களுடைய சுதந்தரங்களுக்கு இடைஞ்சலும், கஷ்டம், நஷ்டம் உண்டுபண்ணக்கூடியதாயிருக்கிறதென்பது பத்திரிக்கைகள், இராஜாங்க விளம்பரங்கள், சட்டசபை நடவடிக்கைகள் முதலியவைகளைத் தவறாமல் பார்த்துவருபவர்களுக்குத் தெரியவரலாம்.

5. வங்காள மாகாணத்தில் சாஸ்வத நிலத்தீர்வை ஏற்பட்டிருக்கிறதும் நமது மாகாணத்தில் முப்பது (30) வருஷங்களுக்கு ஒருமுறை தீர்வை உயர்த்தப்பட்டுவருவதற்கும் இராஜாங்கத்தார் சொல்லிவரும் காரணங்கள் நியாயமற்றதென்பது பலரும் அறிந்தவிஷயம். இதற்கு முக்கிய காரணம் நமது கவனக்குறைவும் கிளர்ச்சி செய்யாமையுமாகும்.

6. நிலத்தீர்வை அநேக இடங்களில் குறைக்கப்படவேண்டியதற்கு பல காரணங்கள் ஏற்பட்டிருப்பதை கவர்ன்மெண்டார் உணர்ந்திருந்தும் குறைப்பதற்குப்பதிலாக உயர்த்தியும் இதற்கனுகூலமாக தவறுதலும் பூரா உண்மையல்லாததுமான சில கணக்குகளைத் தயாரித்துக்கொண்டு வெளியிட்டிருக்கிறார்கள்.

7. இவ்விஷயமாய் கவர்ன்மெண்டார் செய்துவருவது அக்கிரமம் என்று நமக்குள் அநேகருக்குத் தெரிந்திருந்தும் தாராளமாய் வாதம்செய்து எடுத்துச் சொல்லவும் கிளர்ச்சி செய்யவும் அநேகர்கள் முன் வராமலிருந்திருக்கிறார்கள். சிலர்மட்டும் சிரத்தை எடுத்துக்கொள்வது போதுமானதாயில்லை. எல்லோருக்கும் ஏகதேசத்தில் சிரத்தை உண்டுபண்ணவேண்டியது அவசியம். பிரதி கிராமத்திலும் முக்கியஸ்தர்கள் கலந்து விஷயங்களைத் தெரிந்துகொண்டு மற்றவர்களுக்கும் தெரிவித்து தங்கள் குறைகளையும நிவர்த்திசெய்ய மார்க்கங்களையும் அபிப்பிராயங்களையும் கிராம சங்கத்தின் மூலிமாயாவது நேரிலாவது தாலூகா சங்கத்திற்கு தெரிவித்து ஜில்லா சங்கத்தின் உதவியினால் காரியங்களைச் சுலபமாய் அனுகூலமடையச் செய்யலாம். விவசாயிகள், கூலிகள், எளியவர்களின் சௌகரியங்களும் மிராசதாரர்களின் க்ஷேமத்தைப்பொறுத்ததாகவிருக்கிறது.

8. ஆனால் சங்கங்கள் நடைபெறுவதற்கு திரவியமும் ஒற்றுமையும் அவசியம். பிரதி மிராசுதாரர்களும் இந்த அவசியத்தை உணர்ந்து தங்கள் சக்திக்குத் தகுந்தவண்ணம் திரவியம் உதவுவதற்காக அவரவர்களுக்குச் சொந்தமாயுள்ள பூமிகளில் வீதாசாரப்படி ஏற்படும் தொகையைக் கொடுத்து



வரலாம். இம்மாதிரி செய்வதில் சிரமம் ஒன்றும் ஏற்படாது. பல அனாவசியமானதாயும் ஆடம்பரமுள்ளதாயுமுள்ள காரியங்களுக்கு கடன்பட்டாவது செலவு செய்துவரும்போது இம்முக்கிய காரியத்திற்காக சொல்ப திரவியசகாயம் செய்வது சாத்தியமில்லாதது என்று எவரும் கருதமாட்டார்கள்.

9. மறைபைசல் விஷயமாய் ஆக்ஷேபித்து சங்கத்தின் ஆதரவில் 1924ல் தயார்செய்து சபையுடன் கூடிய கவர்னர் பெருமானுக்கு சமர்ப்பிவித்த மகஜர் நாமாவை பார்க்கும் எவரும், முக்கியஸ்தர்கள் எடுத்துக்கொண்டிருக்கும் சிரமத்தையும் விஷயங்கள் சேகரித்ததையும் கண்டு ஆச்சரியமும சந்தோஷமும் அடையாமலிரார்கள்.

10. நாட்டு வாய்க்கால், உய்யக்குண்டான் முதலிய வாய்க்கால்களின் பாசன வசதிகளைப் பெருக்க கட்டளை அணைக்கட்டு விஷயமாய் ஸ்ரீமான் N. D. இலக்ஷுமிநாராயண அய்யர் [illegible]களும் மற்ற பிரமுகர்களும் சொந்தமாய்ச் செலவுசெய்தும் சிரமப்பட்டிருப்பதையும் மறக்கமுடியாது. சம்மந்தப்பட்ட கவன்மெண்டு கனம் மெம்பர் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுவாராக. மிராசுதாரர்கள் இன்னம் தொடர்ந்து சம்மந்தப்பட்ட உத்தியோகஸ்தர்களையும் கவர்ன்மெண்டாரையும் நேரில் பார்த்துவரவும் அவசியமான இதர நடவடிக்கைகள் செய்யவும் வேண்டியிருக்கிறது.

11. கிராமாந்திரங்களில் மந்தை புறம்போக்கு கால்நடைகளுக்குப் போதாமலிருப்பதைப்பற்றியும், மேய்ச்சல் தரையில்லாமலிருப்பதையும், மழை—பாய்ச்சல் கணக்குகள் சரிவரவைத்து வரவேண்டுவதையும், வருஷா-வருஷம் தவறாமல் கஷ்டங்களையும் புகார்களையும் விசாரித்து மிராசுதார்களுக்குப் பட்டா கொடுத்துவரவேணுமாயும், சமீபத்தில் கவர்ன்மெண்டார் கொண்டுவரப்போகிற நிலவரி மசோதா, பாசனமசோதாக்களில் மிராசுதார்களுக்குப் பிரதிகூல்மாயிருக்கும் பிரிவுகளைக்குறித்து சாதகமாய்த்திருத்தும்படி செய்யவேணுமாயும், பஞ்சாயத்து சபைகள் சரியான வழிகளில் அமைக்கப்பட வேணுமாயும் இன்னம் பல விஷயங்களைப்பற்றியும் கவர்ன்மெண்டாருக்குத் தெரிவித்துக்கொண்டு அனுகூலம் பெறவும் முயற்சி செய்யப்படவேண்டும்.

12. சங்கங்கள் உத்தேசப்படி சரிவர வேலைசெய்ய மிராசுதாரர்கள் ஒவ்வொருவரும் சந்தாதாரராகச்சேர்ந்து வருஷந்தோறும் [illegible]ங்கப்படி சந்தா தொகையையும் கொடுத்து சங்கக்கூட்டங்களுக்கும் தவறாமல்வந்து அபிப்பிராயங்களைத் தெரிவித்தும் உத்ஸாகப்படுத்தி வருவார்களானால் இராஜாங்கம் ஆச்சரியப்படும்படியான நுட்பமான விஷயங்களையும் சேகரித்து மிராச

தாரர்கள் சௌக்கியமாய் வாழ்வதற்கு வேண்டிய வசதிகள் செய்துகொள்ளவும் கவர்ன்மெண்டாரிடமிருந்து பெறக்கூடிய நன்மைகளையும் அடையக்கூடும் என்பது திண்ணம். ஜில்லா சங்கத்தின் நிர்வாகிகளும் மற்ற முக்கியஸ்தர்களும் அயர்ந்திராமல் சிரமம் எடுத்துக்கொண்டு சரியான வழிகளில் காரியங்கள் திருப்திகரமாய் நடைபெற முயற்சி செய்யவேணுமாயும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மணப்பாறை }
23—6—27 } எம். கே. ராமச்சந்திரய்யர்.

## பரோடா சமஸ்தானமும் பஞ்சாயத்து பாடசாலைகளும்.

ஒன்று அல்லது இரண்டு உபாத்தியாயர்கள் உள்ள பாடசாலைகளுக்குப் பள்ளிக்கூடக் கட்டடங்களை கட்டிக்கொடுக்கும் விஷயமாய் ஒரு நூதன ஸ்கீம் தயாரித்து தற்போது அனுஷ்டானத்திலிருக்கிறது. இதுவரை பரோடா ராஜாங்கத்தார் எந்தப்பாடசாலையில் 70 பிள்ளைகளுக்குமேல் படிக்கிறார்களோ அந்தப் பாடசாலைக்குமட்டும் கட்டடம் கட்டிக்கொடுத்து வந்தனர். இதனால் சிறிய பாடசாலைகளுக்கு கட்டடம் ஏற்படாமலேயிருந்துவிட்டது.

இந்த ஸ்கீமின்கீழ், கிராம பஞ்சாயத்துப் பாடசாலைக்கும், ஒன்று அல்லது இரண்டு உபாத்தியாயர்கள் உள்ள பாடசாலைக்கும் (உதவிபெற்ற பாடசாலை) கட்டடத்திற்காக, பாதி கிராண்டு பணவுதவிசெய்ய முன்வந்துவிட்டார்கள். கிராண்டைப்பெறும் பாடசாலை நிர்வாகஸ்தரும் அல்லது பஞ்சாயத்தும் சர்க்கார் கொடுக்கும் பிளான்படி கட்டடத்தைக் கட்டவேண்டும். ஒரு உபாத்தியாயர் உள்ள பாடசாலைக்கு ரூ. 500-ம், இரண்டுபேர் உள்ள பாடசாலைக்கு ரூ. 750மாகக் கொடுக்கப்படுகிறது. புதுப்பாடசாலைக் கட்டடங்களின் பிளான்கள் தயாரிப்புக்காக ரூ. 1500 வரை செலவிட்டிருக்கின்றனர். வருஷாவருஷம் ரிபேர்கள் செய்வதும், பராமரிப்புச் செய்வதும் பஞ்சாயத்துக்களின் பொறுப்பாகும். இனிமேல் கட்டடத்துக்காக சர்க்கார் உதவி கொடுக்கமுடியாதென தெரிவிக்கின்றனர். இம்முறையில் கிராண்டுகொடுக்க பரோடா தர்பார் ரூ. 18000 வரை கிராண்டுத்தொகை ஒதுக்கிவைத்திருக்கின்றனர். இத்தத்தொகையைப் பரோடா சமஸ்தானத்தில் பரோடா ஜில்லாவில்மட்டும் செலவிடத் தீர்மானித்திருக்கின்றனர். கட்டாயப்படிப்புச் சட்டத்தின்கீழ் வசூலிக்கப்பட்ட அபராதத்தொகையில் 100-க்கு 60 வீதம் பாடசாலைக் கட்டடங்களுக்குச் செலவிடப்படுகிறது. அந்த இனத்திலிருந்துதான் மேற்சொன்ன 18 ஆயிரமும் விநியோகிக்கப்படுகிறது. தர்பார் சமஸ்தானப் பொது வருமானத்திலிருந்து பாடசாலைக் கட்டடத்திற்கு செலவிடவில்லையென் [illegible] அமுலுக்குக் கொண்டுவருவதிலும் [illegible]மானமிருக்கிறது.

224315


## மாதிரிகாபி பெறுவோருக்கு ஓர் விக்ஞாபனம்.

"'பஞ்சாயத்து' மாதிரிகாபி பெறும் கனவான்களும், பஞ்சாயத்து முதலிய சபையார்களும், ஏனைய ஸ்தாபனங்களும் அம்மாதிரிகாபியைப் பார்த்ததும், தங்களுக்குத் தேவையானாலும், அல்லது விருப்பமில்லாவிடினும் உடன் மறுதபாலில் உசிதம்போல் பதில் தெரிவித்துவிடவேணுமாய் வேண்டப்படுகின்றனர்.

உலகெங்கும் போற்றப்படுவதும், பல நற்சாக்ஷிப்பத்திரங்கள் பெற்றிருப்பதும், ஜனங்களுக்கு சௌக்கியத்தைக் கொடுத்துவருவதுமான

## அரைக்கீரை விதைத்தைலமும், சந்தனாதித்தைலமும்

அடியில் கண்ட விலாசத்தாரிடம் கிடைக்கும். தயாரிக்கப்பட்டுள்ள முறைகள் வெகு சுத்தமாயும் உத்தரவாதமுள்ளதாகவுமிருக்கிறது. "64 சரக்குகள், சஞ்சீவி 10 வகைகள், புஷ்பம் 5 வகைகள் சேர்க்கப்பட்டு முறைப்படி தயார் செய்யப்பட்டிருக்கிறது."

மூன்று வருஷம் தைலம் கெடாமலிருக்கும்

இது கண் சம்பந்தமான சகல எரிச்சல், சிகப்பு, கூசல், மங்கல் கொதிப்பு, நீருத்தலைவலி, மண்டை கரப்பான், மயிர் உதிர்தல், உடம்பில் எரிச்சல் முதலியவைகளும் காமாலைக் குணங்களும், உஷ்ணாதிக்கமும் தீர்ந்துபோகும்.

அரைக்கீரைத் தைலம் விலை:— சேர் 1-க்கு ரூ. 1—0—0
மொத்தம் டஜன் 1-க்கு ரூ. 10—8—0

ஒரு டஜன் ஆர்டர் செய்வோர்கள் அந்த ஆர்டருடன் ரூ. 8—0—0 மணியார்டர் அனுப்பினால்தான் ஆர்டர்கள் கவனிக்கப்படும்.

வி. பி. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

மகா சந்தனாதித் தைலம் விலை சேர் 1-க்கு ரூ. 0—14—0
மேற்படி டஜன் 1-க்கு 8—8—0
தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

விலாசம்:— ஆ. முத்தையா செட்டி,
அரைக்கீரை விதைத்தைல வியாபாரி,
அரபிக்குளத்தெரு, தெப்பக்குளம் P. O. (திருச்சி)

# தீபாவளி விசேஷ விற்பனை!

நாகரீகமானதும் பலதினுசு வேலைப்பாடுள்ளதுமான
புதிய தீபாவளி உடுப்புகள் வேண்டுமானால்
நயமும் லாபமும் பெறவிரும்பினால்

உடனே முந்துங்கள்! முந்திக்கொள்ளுங்கள்!

புது சரக்குகள் வந்துவிட்டன. புது தினுசு உடைகள் குவிந்துவிட்டன.
தீபாவளிக்கென்றே தருவிக்கப்பட்டிருக்கின்றன.

*தாமதியாமல் விஜயம்செய்து முன்னதாகவே தீபாவளிப்பண்டிகைக்குத் தேவையான ஆடைகளுக்கும், உடுப்புகளுக்கும் ஆர்டர் செய்யுங்கள்.*

இண்டோ-யூரோப்பியன்
வேர் ஹௌஸ்
எங்கள்வசம் வந்தபிறகு
விஜயம் செய்தவர்கள்



அதிருப்தியாவது ஏமாற்ற
மாவது அடைந்தார்
களென்று ஒருவரும்
கேட்டிருக்கமுடியாது.

## இதற்குக் காரணமென்ன ?

*வேர்ஹௌஸின் நிர்வாகமும் மேற்பார்வையும் எங்கள்வசம்வந்து முற்போக்கடைந்து நல்லநிலைபெற்றுள்ளது. எனவே, பின்வாங்காமல் வேர்ஹௌஸுக்கு விஜயம்செய்து, வேண்டுவனவற்றைப்பெற்று பண்டிகையை இனிது நடத்திக்கொள்ளுங்கள்.*

---

மழைகாலம்! குளிர்காலம்!! பனிகாலம்!!!

*பிளானல்கள், கம்பளிச்சட்டைகள், உடுப்புகள், மப்லர்கள், குடைகள் இன்னும் என்னென்ன வேண்டுமோ எல்லாம் இந்தஹௌஸில் கிடைக்கும்.*

விலை சரசம்! உத்திரவாதமுள்ளவை!!

வேலைப்பாடும், நயமும் மனம்போலுள்ளவை!!!

## எம். எ. ஹபீவ்,

இண்டோ யூரோப்பியன் வேர்ஹௌஸ்,

தெப்பக்குளம் போஸ்டு, திருச்சி.

---

இந்த வேர்ஹௌஸின் ஆதரவில் **7-10-27**-ல்

## திருச்சி ஸ்டேஷனரி மார்ட்

**திறக்கப்பட்டிருக்கிறது! திறக்கப்பட்டிருக்கிறது!!**

*எல்லா ஸ்டேஷனரி சாமான்களும், பிற சரக்குகளும், வாசனைத் திரவியங்களும் கூடியசீக்கிரம் எங்கள் 'மார்ட்டால்' சப்ளை செய்யப்படும்.*

தெப்பக்குளம் மூலையில் வந்துபாருங்கள்!

---

PRINTED AT THE T. C. P. & P. S. LIMITED, TRICHINOPOLY, AND PUBLISHED BY M. S. R. CHANDRAN, TEPPAKULAM P. O., TRICHY.